# வன்னியில் இராணுவ 'ட்ரக்' மீது புலிகள் தாக்குதல்
## சிப்பாய் உயிரிழப்பு; 11 படையினர் படுகாயம்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2 23 புரடாதி 02 இதழ் 220
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 18 — 09 — 1992

(வவுனியா)

வவுனியாவில் இராணுவ 'ட்ரக்' ஒன்றின் மீது நேற்றுக் காலை விடுதலைப்புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 11படையினர் படுகாயமடைந்துள்ளதாக கேர்ணல் சரத்முனசிங்க தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபன் நினைவுதினம்
## 3-வது நாளாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் 5ம் ஆண்டு நினைவு தினம் நேற்று மூன்றாவது நாளாக யாழ்,குடா முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 7 மணி தொடக்கம் மாலை5 மணிவரை நினைவுதின நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

வலிகாமத்தில் ஆறு இடங்க

(4ம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழர் செய்திகளுக்கு
## இந்திய பத்திரிகைகள் இருட்டடிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஈழத்தமிழர்கள் படும் இன்னல்களை இந்தியப் பத்திரிகைகள் இருட்டடிப்பு செய்து வருவதாக "உலகத் தமிழ் ஓசை" என்ற பத்திரிகை கண்டனம் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்: இந்திய பத்திரிகைகள் சிங்களவர்களை

(4ம் பக்கம் பார்க்க)

# ★ பெல்ஜியம் நிறுவனத்தின் மூன்று கப்பல் ஆயுதம் வெடிமருந்துகளை
# அரசு அழித்து நிர்மூலமாக்கியது

(கொழும்பு)

**பெல்ஜியம் நாட்டு நிறுவனம் ஒன்றுக்கு சொந்தமான மூன்று கப்பல்களில் ஏற்றக்கூடியளவு ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் அழித்து நிர்மூலமாக்கி இருப்பதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.**

1988ம் ஆண்டு முற்பகுதியில் கொழும்பு துறைமுகத்தில் வைத்து மேற்படி பெல்ஜியம் கப்பலை இலங்கை அரசு கைப்பற்றி அதிலிருந்த பெருமளவு ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் பறிமுதல் செய்தது. பெல்ஜியத்திலிருந்து தாய்வான் நோக்கிச் சென்று கொண்டிருந்த இந்தக் கப்பல் இலங்கை கடலில் தரித்து நின்ற போதும் கப்பலில் ஆயுதங்கள் எடுத்துச்செல்லப்படுவதை அறிவிக்கத் தவறியதை

(3ம் பக்கம் பார்க்க)

## பெருமளவு ஆயுதங்களை இலங்கை திருடியது

(கொழும்பு)

பெல்ஜியம் நிறுவன கப்பலிலிருந்து பெருமளவு ஆயுதங்களையும, வெடிமருந்துகளையும் இலங்கை அரசு களவாடியுள்ளதாக வேற்றுநாட்டு பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்ததாக ஏ. எப். பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

கைப்பற்றிய இந்த ஆயுதங்களை இலங்கை அரசு விலைக்கு கேட்டதாகவும் ஆனால் பெல்ஜியம் நிறுவனம் இதற்கு மறுத்துவிட்டது என்றும்.

ஆனால் இந்த ஆயுதங்களில் ஒரு பகுதியை விடுதலைப்புலிகளுக்கு எதிராக பாவிப்பதற்கு இலங்கைஎடுத்துள்ளதாகவும் அந்நபாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்ததாக ஏ. எப். பி. தெரிவித்தது. (சி-சு)

## அடுத்த கட்ட தாக்குதலுக்கு ராணுவம் தயாராகி வருகிறது

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கைககு படையினர் தயாராகி வருவதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது மீட்கப்பட்ட பகுதிகளில் படையினர் தமது நிலைகளைப் பலப்படுத்திவருவதாகவும் அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கைக்கும் தயாராகி வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை வடக்குகிழக்கில் தினமும் சிறிய அளவில் படையினர் புலிகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கேர்ணல் சரத்முனசிங்க நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (சி)

## சிமெந்து ஊழியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான ஆவணி மாதச் சம்பளம் நாவலர் வீதியிலுள்ள தற்காலிக காரியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை முதல் வழங்கப்படும்.

## இரு பொம்மர்கள் பலாலி விரைவு

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியிலிருந்து இரு பொம்மர்கள் நேற்று மாலை பலாலி முகாமிற்கு வந்துள்ளன.

இதேவேளை நேற்று அவ்ரோ விமானங்கள் பல தடவை

(4ம் பக்கம் பார்க்க)

## அகதிகளை நாடுதிரும்புமாறு துண்டுபிரசுரம் விநியோகம்

(கொழும்பு)

இந்தியாவில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை நாடு திரும்ப ஊக்குவிக்கும் வகையில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்படவுள்ளது.

நாடு திரும்பும் அகதிகட்கு இலங்கை அரசு செய்யும் உதவிகளைவிட, ஐ. நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் செய்யும் உதவிகளையும் குறிப்பிட்டு இந்த துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்படும்

நாடு திரும்ப தயக்கம் காட்டுவோரை தூண்டும் வகையில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. [கே]

## புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த அரசு விரும்புகிறது
### - இலங்கை தூதர் பேட்டி -

(புதுடில்லி)

"விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசு விரும்புகிறது. அதற்கான நிர்ப்பந்தத்தை உருவாக்க அரசு முனைந்துவருகிறது" என்று இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் சலாநிதி நெவில் கனகரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து வெளியாகும் ஆங்கில சஞ்சிகையான 'ஃப்ரண்ட்'டிற்கு அளித்துள்ள பேட்டியிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் தீவிரமான போராட்டத்திற்கு காரணங்கள் உண்டு என்பதை ஒப்புக்கொண்ட அவர் "பிரபாகரனுக்காக உயிரைக் கொடுக்கக்கூடிய புலிகள் முன் எந்த ஒரு இராணுவப்

(4ம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசியலில் பெருமாள் ஈடுபடுவார்?

(புதுடில்லி)

இந்தியாவின் பாதுகாப்பிலிருக்கும் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதல்வர் அ. வரதராஜப் பெருமாள் இலங்கை திரும்பி அரசியலில் ஈடுபடவிரும்புவதாக இந்தியத் தலைவர்களிடம் தெரிவித்துள்ளார்

மத்திய பிரதேச மாநிலத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த திரு. பெருமாளும் அவரது குடும்பத்தினரும் கடந்த மாதம் திடீரென இமாசலப் பிரதேசத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்கள். அங்கு 'டல்கௌசி' என்ற இடத்தில் பலத்த காவ

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கடிதம் அரசுக்கு கிடைக்கவில்லை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்னை தொடர்பாக சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு விருப்பம் தெரிவிக்கும் கடிதங்களோ தகவல்களோ இதுவரை விடுதலைப் புலிகளிடமிருந்து அரசுக்கு கிடைக்கவில்லையென அமைச்சரவைப் பேச்சாளர் திரு. ரணில் விக்கிரமசிங்க நேற்று செய்தியாளர் மாநாட்

(4ம் பக்கம் பார்க்க)

ஆறில்லாவிட்டால் என்ன குளம் இல்லையா?

## வரி விளம்பரம்


### பாகற்காய் குளிகை

சலரோக நோயைக் கட்டுப் படுத்தக்கூடிய KARAWILLA Capsules கிடைக்குமிடம் எஸ். டி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6689)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை காலயியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல் மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள்; மூத்திரரோகங்களில் பிரபலமானவர்; சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு யாழ்பாணம். (சி-6761)


## இன்று

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி யாழ். பிரதேச ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று 18-ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் யாழ் பிரதேச தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

## இலவச திருமணப் பதிவு

(உடுவில்)

சங்குவேலி தெற்கு ஸ்ரீ அம்பாள் சனசமூக நிலையத்தின் உதவியுடன் இப்பகுதியில் உள்ள இருபது குடும்பங்களுக்கு உடுவில் பிரிவு விவாகப்பதிவாளர் திரு. செ. அன்னலிங்கத்தினால் இலவச பதிவுத்திருமணம் செய்து வைக்கப்பட்டது. [109]

## பரிசளிப்புவிழா

(நல்லூர்)

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை 19ம் திகதி சனிக்கிழமை காலை நடைபெறும்.

பீற்றேர் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக வைத்திய கலாநிதி ம. கணேசரட்ணமும் பாரியாரும் கலந்து கொள்வார்கள். (158)

## இராசி பலன்

18 09-1992

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு புரட்டாதி 02)

ஷஷ்டி மு. ப. 11 – 20 வரை ரோகினி மரணயோகம் பி. இ 4-57 வரை. இராகு காலம் காலை 10-33 முதல் 12-03 வரை. சுபநேரம் காலை 6-03 முதல் 7-33 வரை.

மேடம்;- நேர்மை குன்றுதல், உடல் உபாதை, துன்பம்.

இடபம்: பந்து மித்திரர் உதவி, பணவரவு, விவாதம்.

மிதுனம்: துஷ்டர் தொல்லை, அலைச்சல், குடும்பபிரிவு.

கடகம்: எதிர்பாராத நன்மை, குடும்பசுகம், புகழ்.

சிங்கம்: பெரியோர் ஆசி, ஆதரவு, மனைச்சுகம்.

கன்னி: தொழில் பகை, கண்டிப்பு, வீண் தொல்லை.

துலாம்; அநாவசிய செலவு, மனசஞ்சலம், உடல்உபாதை.

விருச்சிகம்; இனசனவரவு, தெய்வீகசெலவு, பெருமை.

தனுசு: மிதமானபோக்கு. புத்திரர்பகை, கண்டனம்.

மகரம்: தொழில்குறைவு, வேலைப்பழு, நண்பர்பகை

கும்பம்: ஏமாற்றம், வீண் வம்பு, அதிகயோசனை.

மீனம்: காரியசித்தி, பயண அனுகூலம், கல்விசிறப்பு.

– ஜோஸ்யர்

## கொழும்பில்— தங்க மோதிரம் பித்தளை மோதிரமாக மாறியது

(கொழும்பு)

அண்மையில் கொழும்பு சென்றிருந்த கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவரது தங்க மோதிரம் பித்தளை மோதிரமாக மாறிய சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

தெகிவளையில் இவரை வழிமறித்த 3 பொலிஸார் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் என்று கூறி சோதனையிட்டனராம்.

இவரது மோதிரத்தைத் தருமாறும் மோதிரத்தில் புலிச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளதா என பரிசோதிக்கவேண்டும் என்று கேட்கவே, அவரும் மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்தார். மூவருமாக மோதிரத்தை பரிசோதித்த பின் அவரின் பொக்கற்றுக்குள் மோதிரத்தைப் போட்டுவிட்டு இந்தப்பக்கங்களில் திருடர்கள் உலாவுகிறார்கள் கவனமாகப் போய்ச்சேருங்கள் எனக் கூறிச் சென்றனராம்.

சீருடையினர் சென்றதும் இவர் தனது பொக்கற்றுள் இருந்த மோதிரத்தை எடுத்துப் பார்த்தபோது இவரது தங்க மோதிரத்திற்குப் பதிலாக ஒரு பித்தளை மோதிரம் இருந்ததாம். (சி)

## உற்சவம்

(நெல்லியடி)

துன்னாலை அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரம் ஆழ்வார் கோவில் வருடாந்த உற்சவம் இம் மாதம் 26ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. அடுத்த மாதம் 9ம் திகதி சப்பறமும், மறுநாள் இரதோற்சவமும், 11ம் திகதி சமுத்திர தீர்த்தமும், மறுநாள் பட்டுத் தீர்த்தமும் நடைபெறும். (160)

## ஊன்றுகோல்களை ஒப்படைக்கக் கோரிக்கை

(நெல்லியடி)

மந்திகை அரசினர் வைத்தியசாலையின் கால் ஊனமுற்றோர் பிரிவில் சிகிச்சைபெற்றவர்கள்நோயாளர்களின் நலன் கருதிஅவர்களுக்குவழங்கப்பட்டுள்ள 'ஊன்றுகோல்களை' மேற்படி பிரிவிற்கு திருப்பி ஒப்படைக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர். [160]

## காரைநகர் மக்களுக்கு

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த காரைநகர் மக்கள் நிவாரணத்தைப் பெறுவதிலுள்ள நடைமுறைகளைச் சரியான முறையில் கடைப்பிடிப்பதற்காக தங்கள் காரைநகர் கிராமசேவையாளர்களுடன் தொடர்பு கொண்டு நிவாரண அட்டைகளைச் சமர்ப்பித்து அதில் அவர்களின் ஒப்பத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## சத்துணவு ஊழியர்கள் கைது

(சென்னை)

தமிழகத்தில் சத்துணவு ஊழியர்கள நேற்று மேற்கொண்ட போராட்டத்தில் பெண்கள் உட்பட பெரும் தொகையானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்

தமது வேலைகள் நிரந்தரமாக்கபபடவேண்டும் என்ற கோரிக்கை உட்பட 10 அம்சக் கோரிக்கையை அவர்கள் முன்வைததுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (க)

## வெற்றிலை திருட்டு

(பண்டத்தரிப்பு)

இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த சில்லாலை வாசிகளின் வெற்றிலைத் தோட்டங்களிலுள்ள வெற்றிலைகளை சிலர் திருடி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் தமது தோட்டத்தைப் பார்க்கச் சென்ற சில்லாலை தெற்கைச் சேர்ந்த ஒருவர், தமது வெற்றிலைத் தோட்டத்தில் வெற்றிலை பறித்துக் கொண்டிருந்த இருவரைத் துரத்திச் சென்றபோது வெற்றிலையைப் போட்டுவிட்டு அவர்கள்தப்பி ஓடிவிட்டதாகவும் கூறப்படுகிறது. ((72

## உதைபந்தாட்டப் போட்டி

(நெல்லியடி)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற 'லீக்' முறையிலான உதைபந்தாட்டப் போட்டியில் அல்வாய் மனோகரா பி அணியை எதிர்த்து வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் 3–1 கோல்களால் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக பி அணி வெற்றிபெற்றது.

அடுத்த ஆட்டத்தில் மனோகரா ஏ அணியை எதிர்த்து நெல்லியடி திருஇருதய விளையாட்டுக்கழகம் மோதியது. 3–1 கோல்களினால் மனோகரா ஏ அணியே வெற்றியீட்டியுள்ளது. (160,


## பொது அறிவித்தல்

### யாழ்ப்பாண மாநகரசபை

1992-ம் ஆண்டுக்குரிய துவிச்சக்கரவண்டி உரிமம் பெறாதவர்கள் 30-09-92க்கு முன் அவற்றைப் பெற்றுக்கொள்ளுவதன் மூலம் எம்முடன் ஒத்துழைத்து அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
16 – 09 – 1992

(ஏ-2448)

## திருமண நன்றி நவிலல்

ஆடுபாவத்தை வதிரி கரவெட்டியைச் சேர்ந்த
செல்வன் சுந்தரலிங்கம் ராஜநடேஸ்வரனுக்கும்
(ஆயுர்வேதக்கல்லூரி யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி
செல்வி கலைவாணிக்கும்

16-09-92 காலை மணமகள் இல்லத்தில் சிறப்பாக நடந்தேறிய திருமண வைபவத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும், குறிப்பாக ஆயுர்வேதக்கல்லூரி அதிபர் சுகந்தன் இன்னாசித்தம்பி அவர்களுக்கும் எம் குடும்பத்தார் சார்பில் உளம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு. திருமதி V. S. இரத்தினசிங்கம் தம்பதிகள்,
153, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-6817)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### இழுவைப் பெட்டியுடனான டிராக்டர்களைப் பதிவு செய்தலும், வண்டல் மண் விற்பனையும்

1. யாழ்ப்பாண மாநகர சபையின் சேவைகளுக்கு இழுவைப் பெட்டியுடனான டிராக்டர்களை வழங்க விரும்பும் உரிமையாளர்கள் எதிர்வரும் 22-09-92 ஆம் திகதிக்கு முன்பதாக பதிவுக்கட்டணமாக ரூபா 100/-ஐ செலுத்தி சபையுடன் தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.
2. யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட குளங்களிலிருந்து அகற்றப்படும் விவசாயத்திற்குகந்த வண்டல் மண் விற்பனைக்குள்ளது. கொள்வனவு செய்ய விரும்புவோர் டிராக்டர் பெட்டி ஒன்றுக்கு ($\frac{3}{4}$ கியூப்) செலுத்தத் தயாராகவுள்ள தொகையை 25-09-92 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

இவை தொடர்பான மேலதிக விபரங்களை மராமத்துப் பொறியியலாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
16-09-1992.

(ஏ-2447)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் 1992 – 10 – 20 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. தற்காலிக உதவி விரிவுரையாளர்
   - தாவரவியல்/
   - இரசாயனவியல்/
   - கணிதமும் புள்ளி விபரவியலும்/
   - விலங்கியல்/
   - பௌதீகவியல்/
   - கணனி விஞ்ஞானம்
2. தற்காலிக செயன்முறைக் காட்டுனர்
   - தாவரவியல்/
   - இரசாயனவியல்/
   - விலங்கியல்/
   - பௌதீகவியல்
3. தற்காலிக போதனாசிரியர்
   - கணிதமும் புள்ளிவிபரவியலும்/
   - கணனி விஞ்ஞானம்
4. சம்பள அளவுத் திட்டம்:-
   1. தற்காலிக உதவிவிரிவுரையாளர் ரூபா 3900/- மாதமொன்றுக்கு (நிலையானது)
   2. தற்காலிக செய்முறைக் காட்டுனர் பட்டதாரி) ரூபா 3250/- மாதமொன்றுக்கு (நிலையானது) (பரீட்சைப் பெறுபேறுகளுக்காக காத்திருப்போருக்குஅவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை ரூபா 3000/- (நிலையானது) மாதச் சம்பளத்தில் வைக்கப்படுவர்)
   3. தற்காலிக போதனாசிரியர் (பட்டதாரி) ரூபா 3250/- மாதம் ஒன்றுக்கு (நிலையானது) (பரீட்சைப் பெறுபேறுகளுக்காக காத்திருப்போருக்குஅவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை ரூபா 3000/- (நிலையானது) மாதச் சம்பளத்தில் வைக்கப்படுவர்)

இப்பல்கலைக் கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களைப்பெற விரும்புவோர் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட 23 x 10 ச. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
1992-09-15.

(ஏ-2149)

# 2000ஆம் ஆண்டளவில் ஐந்து கோடி சிறுவர்கள் தெற்காசியாவில் உயிரிழக்கும் அபாயம்

## கொழும்பு மாநாட்டில் எச்சரிக்கை

(கொழும்பு)

தெற்காசியாவில் சுகாதார வசதிகள் மேம்பாடடையா விடில் 2 ஆயிரம் ஆண்டளவில் 5 கோடி சிறுவர்கள் மரணமடைவர்.

ஐ நா. சிறுவர்கள் நிதிய நிறைவேற்று இயக்குநர் ஜேம்ஸ் கிறிஷ்டி நேற்று முன்தினம் இவ்வதிர்ச்சி தரும் தகவலைத் தெரிவித்தார்

கொழும்பில் நடைபெற்ற சிறுவர்கள் தொடர்பான தெற்காசிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மட்ட மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தெற்காசியாவில் 50 கோடி சிறுவர்கள் அடிப்படைச் சுகாதார வசதிகளின்றி அல்லலுறுவதாகவும் இவற்றிற்கு ஏற்ற பரிகாரம் காணாவிடில் தெற்காசிய வளர்ச்சியில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும்

இப்பிராந்தியத்திலுள்ள சிறுவர்களில் நியூமோனியா, வயிற்றோட்டம் போன்றநோய்களால் 20 லட்சம் சிறுவர்கள் அடுத்த வருடங்களில் இறக்க நேரிடும்.

வறுமை, அறியாமை, சுகாதார வசதியில்லாமை நாட்டு நிலைமை இவைகளால் சிறுவர்களே பெரிதும் பாதிப்புறுவதாக மாநாட்டில் உரையாற்றியோர் பலர் கருத்தாகும்

இச்சவாலைச் சமாளிக்க தெற்காசிய நாடுகளின் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இங்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் சில:-

0 சகல பிள்ளைகட்கும் தடுப்பு மருந்து கொடுத்தல், 0 ஆரம்பக் கல்வி அளித்தல். 0 போசாக்கு உணவு கொடுத்தல், 0 சுத்தமான குடிநீர் வழங்கல், 0 போதிய இருப்பிட வசதிகளை வழங்குதல் ஆகியவற்றில் முக்கிய கவனம் செலுத்தினால் சிறுவர்களின் அவலநிலையைப் போக்க ஒருவாறு முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

### பிரேமதாசா உரை

இம்மாநாட்டை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய ஜனாதிபதி பிரேமதாசா உளரீதியாகவும், உடல்ரீதியாகவும் பாதிக்கப்படும் சிறுவர்களைப் பாதிப்படையவிடாமல் நாம் காப்பாற்றவேண்டும் என வலியுறுத்தினர். (கே)

## பிரான்ஸ் அதிபருக்கு சிறுநீரக புற்றுநோய்

[பாரிஸ்]

பிரான்ஸ் நாட்டு ஜனாதிபதி மித்ரோனுக்கு புற்றுநோய் ஏற்பட்டிருப்பதனை மருத்துவர்கள் உறுதிசெய்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அறுவை சிகிச்சைக்குட்பட்டிருந்த அவருக்கு சிறுநீரகப் பகுதியில் புற்றுநோய் ஏற்பட்டிருந்தது.

எனினும் அவருக்கு உயிர் ஆபத்து ஏதும் இல்லையென்றும், அடுத்த வாரம் முதல் ஜனாதிபதி கடமையில் அவர் ஈடுபடுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

85 வயதான ஜனாதிபதியின் சுகயீனச்செய்தி பரவியதும், பிரான்ஸின் பங்கு மார்க்கெட்டில் பங்குகள் விலைகூடவீழ்ச்சி கண்டன. (கே)

## "ராஜீவ்" அமோக விற்பனை

புதுடில்லி)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைப் பற்றி அவரது மனைவி சோனியா காந்தி ''ராஜீவ்'' என்ற பெயரில் நூல் ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார்.

இந்திய நாணயப்படி 1500 ரூபாவாக இருந்தபோதும் இந்த நூல் பெரிதும் பிரபல்யமாகிச் சுடச் சுட விற்பனையாகின்றது. [கே]

## இடம்பெயர்ந்த 200 குடும்பங்களுக்கு 200 கொட்டகைகள்

(வட்டுக்கோட்டை)

ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் திடீரென மேற்கொள்ளப்பட்ட இராணுவநடவடிக்கைகளால் அளவெட்டி, இளவாலை, மாதகல், சில்லாலை ஆகிய இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தற்போது 2419 குடும்பங்கள் தங்கியுள்ளன.

பாடசாலைகள், கோவில்களில் தங்கியிருந்த இக்குடும்பங்களில் பலருக்கு தற்போது கொட்டகைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

சச்சி முகாமிலிருந்த 44 குடும்பங்களுக்கு 44 கொட்டகைகளும், முருந்தன் முகாமிலிருந்த 75 குடும்பங்களுக்கு 75கொட்டகைகளும், மானிப்பாய் இந்துக் கல்லூரி முதலாம் முகாமிலிருந்த 23 குடும்பங்களுக்கு 23 கொட்டகைகளும், மானிப்பாய் இந்துக் கல்லூரி இரண்டாம் முகாமிலிருந்த 14 குடும்பங்களுக்கு 14 கொட்டகைகளும், அதிகாரி முகாமிலிருந்த 44 குடும்பங்களுக்கு 44 கொட்டகைகளுமாக மொத்தம் 200குடும்பங்களுக்கு 200 கொட்டகைகளை அகதிகள் புனர்வாழ்வுக் கழக கட்டுடைக்கிளையினர் அமைத்துக்கொடுத்துள்ளனர். (139)

## நவாலியில் உண்ணாவிரதம்

(மானிப்பாய்)

தியாகி திலீபனின் 5-வது நினைவு தினத்தையொட்டி லியில் 1 நாள் அடையாள உண்ணாவிரதம் 15-ந் திகதி அனுஷ்டிக்கப்பட்டது.

அராலியிலிருந்து இடம் பெயர்ந்து நவாலியில் தங்கியுள்ள மக்கள் தமது முகாமில் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை இவ் உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். (71)

## சுகாதார சேவை

(நெல்லியடி)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க, கரவெட்டிப் பிரிவுப் பணிமனையில் ஆரம்ப சுகாதார கவனிப்பு பயிற்சியில் 150 பெண் பிள்ளைகள் பயிற்சி பெற்று, சுமார் 60 பெண்பிள்ளைகள் இப்பகுதி கிராமம் தோறும், சேவை புரிந்துவருகிறார்கள். (160)

## பெற்றோலிய பொருட்கள் விலை உயர்வு இந்தியாவில் பெரும் எதிர்ப்பு

(புதுடில்லி)

இந்தியாவில் பெற்றோலியப் பொருட்களின் திடீர் விலை அதிகரிப்பை எதிர்த்து நாடு தழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை நடாத்த எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன.

மேற்படி பொருட்களின் விலை அதிகரிப்பு நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

இதையடுத்து இந்தவிலை அதிகரிப்புக்கு எதிராக பரவலாக பெரும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது

எதிர்க்கட்சிகளை விட பல பொது அமைப்புகளும் இந்த விலை அதிகரிப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

உலகவங்கியின் ஆலோசனைக்கமையவே மத்திய அரசு இதனை மேற்கொண்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. (சி)

## ★ ஆஸ்திரேலியாவில் உலகத் தமிழர் பண்பாட்டு கழக 5-வது மாநாடு

(சாவகச்சேரி)

உலகத் தமிழர் பண்பாட்டுக் கழகத்தின் 5-வது மகாநாடு அவுஸ்திரேலியா, நியூ சவுத்வேல்ஸ் பல்கலைக் கழகத்தில் எதிர்வரும் அக்டோபர் 3ம், 4ம், 5ம் திகதிகளில் வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது.

இம் மகாநாட்டுக்கான முன்னேற்பாடுகளை மகாநாட்டுக் குழுவின் செயலாளர் திரு. பாலா - பாலேந்திரா மேற்கொண்டு வருகின்றார். உலகின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான அறிஞர்கள், கல்விமான்கள் இம் மகாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இம்மாநாட்டிற்கு, மாநாட்டுக்குழுவின் நேரடிஅழைப்பை ஏற்று சாவகச்சேரியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியர் சோ. சுப்பிரமணி ஐயர் இந்த மாத இறுதியில் அவுஸ்திரேலியா பயணமாகவுள்ளார். இவர் "தமிழ் மொழியில் புதிய ஒலி அமைப்புக்கள்'' என்ற தலைப்பில் 54 பக்கங்கள் கொண்ட ஆராய்ச்சிக் கட்டுரையொன்றை அண்மையில் உலகத் தமிழர் பண்பாட்டுக் கழகத்திற்குச் சமர்ப்பித்தார். [155]

## மினி பஸ்ஸில் இரவல் நகைகளை தவறவிட்ட பெண்

(நெல்லியடி)

அல்வாய் தெற்கைச்சேர்ந்த பெண்ணொருவர் தாவடியிலுள்ள தனது உறவினரின் திருமண வைபவத்தில் இரவல் நகையுடன் கலந்து கொண்டதன் பின்பு யாழ்-பருத்தித்துறை மினி பஸ்ஸில் தனது பிரயாணத்தை மேற்கொண்ட போது நகைகளை இழந்துள்ளார்

இரண்டு சிறிய பிள்ளைகளுடனும், இரண்டு சிறிய பிரயாணப் பையுடனும், தனது கூறைச்சேலை அத்துடன் 3 பவுண் தங்க அட்டியல், ஒரு சோடி சிமிக்கி என்பனவற்றை அப்பையினுள் பாதுகாப்பாக வைத்து மினி பஸ்ஸில் பயணம் செய்தார். அதிக பிரயாணிகளுடன் சேவையிலீடுபட்ட அந்த பஸ்ஸில் பிரயாணம் செய்த வேறொரு பிரயாணியினால் இவரது பிரயாணப் பை மாறி எடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

இரவல் நகையை கையிழந்தவரான அல்வாய் தெற்கைச் சேர்ந்தவரான திருமதி கயிலாயநாதன் சாந்தமணி (வயது 33) இது தொடர்பாக மினி பஸ் சங்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளார். (160)

## திலீபன் நினைவு நிகழ்ச்சிகள்

(பண்டத்தரிப்பு)

தியாகி திலீபனின் ஐந்தாவது நினைவை முன்னிட்டு சண்டிலிப்பாய் வட்டவைப் பிரதேசத்தில் கிராம ரீதியாக உண்ணா விரதங்களும், சிரமதானப் பணிகளும் நடைபெற்று வருகின்றன

இப்பகுதியிலுள்ள சன சமூக நிலையங்களில் திலீபனின் திருவுருவப்படம் அலங்கரித்து பந்தல்களில் வைக்கப்பட்டு அஞ்சலி செய்யப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. (72)

## கிராமசேவகர் இடமாற்றம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் கிராமசேவை அலுவலராகப்பணியாற்றிய திரு. சோமசுந்தரம் வசந்தகுமார் பருத்தித்துறை தும்பளைப் பகுதியின் கிராமசேவை அலுவலராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். திரு எஸ். மகேந்திராஜா கரவெட்டி கரணவாய்ப் பிரிவு கிராம சேவை அலுவலராகப் பொறுப்பேற்றுள்ளார். [52]

## யாழ். குடாவில் தடுப்பூசி மருந்து தட்டுப்பாடு நோயாளர் பெரிதும் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாவில் ஏற்புத் தடுப்பூசி மருந்துக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நோயாளர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நோயாளர்கள் இவ்வூசி மருந்தினைப் பெறுவதற்குத் தனியார் நிறுவனங்களையும், தனியார் வைத்தியசாலைகளையும் நாடுவதனால் குளிரூட்டியில் வைத்துப் பாதுகாக்க முடியாத நிலையிலுள்ள ஏற்புத் தடுப்பூசி மருந்துகளையே பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்புத் தடுப்பூசி மருந்துகளை ஐம்பது ரூபாவுக்கு மேல் கொடுத்தே நோயாளர்கள் பெற்றுக் கொள்கிறார்களாம்.

குறிப்பாக நாயினால் கடியுண்டோர், கறள் தகரம், முட்கம்பி வெட்டிக் காயத்திற்குள்ளாகி தினமும் யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பகுதிக்கு வருவோர் ஏற்புத் தடுப்பூசி மருந்தினைப் பெற முடியாத நிலையில் திரும்பிச் செல்கின்றனர்.

இதனால் சிலர் இவ்வேற்பு ஊசிகளை வவுனியா வைத்தியசாலைக்குச் சென்று ஏற்ற வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. (56)

## ஒரே வீட்டில் மூன்று சைக்கிள் திருட்டு

(அரியாலை)

யாழ் சுண்டுக்குளி புனித-யுவானியார் ஆலய முன்பாகவுள்ள எஸ். பொன்கலன் என்பவருடைய வீட்டில் கடந்த 11ம் திகதி இரவு மூன்று லேடிஸ் சைக்கிள்கள் திருட்டுப் போயுள்ளன.

இதுபற்றி காவல்துறையில் புகார் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. [59]

## பெல்ஜியம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யடுத்தே இலங்கை இக்கப்பலை ஆயுதங்களுடன் கைப்பற்றியது

பல மாத விசாரணைகளின் பின் மேற்படி கப்பலையும், ஆயுதங்களையும் கையளிக்க இலங்கை ஒப்புக்கொண்டதுடன் இவற்றை இலங்கை துறைமுகத்திலிருந்து 1988-ம் ஆண்டு யூன் மாதத்திற்கிடையில் அகற்றுமாறும் உத்தரவிட்டிருந்தது.

எனினும் அந்நிறுவனம் கப்பல் மாத்திரம் அகற்றியதாகவும் ஆயுதங்களையும்வெடி மருந்துகளையும் ஒப்பந்த காலத்தினுள் அகற்றத்தவறிவிட்டதாகவும் இதனால் இவற்றை இந்திய கருங்கடலில் கொட்டி முழுவதையும் அழித்துவிட்டதாக இலங்கை அரசு கூறியுள்ளது. (சி-சு)

# இடம்பெயர்ந்தவர்களுக்கு இருப்பிடங்கள் துரிதமாக அமைக்கப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த வலி வடக்கு- மேற்குப் பகுதி மக்களுக்கு சாவச்சேரி, சண்டிலிப்பாய், சங்கானைப் பகுதிகளில் தற்காலிக குடிசைகளும் மலசல கூடங்களும், குழாய்க் கிணறுகளும் அமைக்கப்படும் வேலைகள் துரிதகெதியில் நடைபெற்றுவருகின்றன.

மேற்படி பகுதிகளில் குடிசைகள் அமைக்கும் வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் முற்றுப்பெற்ற குடிசைகளில் உடனடியாக இடம்பெயர்ந்த குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுவருகின்றனர்.

ஐந்து குடும்பங்களுக்கு ஒரு மலசலகூடமும் முகாமுக்கு ஒரு குழாய்கிணறு என்றஅடிப்படையில் வேலைகள் நடைபெற்றுவருகின்றது.

இதுவரை 5க்கும் மேற்பட்ட குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுவிட்டதாகவும் இக்குழாய் கிணறுகள் பெரும்பாலும் முகாம்களாகப் பவிக்கப்படும் பாடசாலைகளிலேயே அமைக்கப்பட்டுவருகின்றது.

முகாம்கள் மூடப்படும் காலங்களில் இககுழாய்க்கிணறுகள் பின்பு பாடசாலைமாணவர்களுக்கு பயன்படவேண்டும் என்ற நோக்கிலேயே இவை அமைக்கப்பட்டுவருவதாவும் அரசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் தெரிவித்தனர். (வி)

## ஒய்வூதிய வவுச்சர்

(மானிப்பாய்)

செப்ரெம்பர் மாதத்துக்குரிய ஒய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் யாழ் செயலகத்திலிருந்து நேற்றுமுன்தினம் அனுப்பிவைக்கப்பட்டன.

சம்பந்தப்பட்டவர்கள் அந்தந்த வங்கிகளுக்குச்சென்று பணத்தைப் பெறுக்கொள்ளலாமென்று தெரிவிக்கப்படுகிறது. (71)

## குமண புறப்படுகிறது

(புலோலி)

கொழும்பில் சிகிச்சை பெற்ற நோயாளர்களை ஏற்றி வருவதற்காக குமண கப்பல் இன்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறையிலிருந்து திருகோணமலைக்குப் புறப்படுகிறது.

திருகோணமலையிலிருந்து நோயாளர்களுடன்எதிாவரும் ஞாயிறன்று பருத்தித்துறை வரும்குமண கப்பல் அன்றைய தினமே யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையால் அங்கீகரிக்கப்பட்டநோயாளர்களை ஏற்றிக்கொண்டுமீண்டும் திருகோணமலை நோக்கிப் புறப்படும். (61-160)

## புலிகளின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டிக் தெரிவித்தார்.

புலிகளுடன் அரசு தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளதாக வெளிவரும் செய்திகள்பற்றி கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினர்.

இது குறித்தும் பிரச்னைக்கான தீர்வை சகல கட்சிகளும் ஏற்றுக்கொள்ளும் விததத்தில் நிலைமைகளை உருவாக்குவதும் தெரிவுக்குழுவை பொறுத்த விடயமென்றும் திரு. ரணில் மேலும் கூறினர். (சி)

## இரு பொம்மர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பலாலி முகாம் வந்து திரும்பியுள்ளன.

மேலும் நேற்றும், நேற்று முன்தினமும் ஹெலிகளும் பல தடவைகள் வலிவடக்கு வலிமேற்கு பகுதிகளில் தீவிர நோட்டமிட்டதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## தியாகி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ளிலும், தென்மராட்சியில் நான்கு இடங்களிலும் வடமராட்சியில இரண்டு இடங்களிலும் திலீபன் நினைவாக அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றது

நேற்றுக் காலை நல்லூருக்கு திலீபன் திருவுவப்படத்துடன் ஊர்த்தியாக வந்த மக்கள் நல்லூரில் நடைபெற்ற நினைவு தின நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

நாவற்குழி லவனிதா குடியேற்ற திட்டம், அளவாய் பாபு வீதி, பனை அரசினர் வைத்தியசாலை, கொடிகாமம் போன்ற பகுதிகளில் சிரமதானப் பணிகள் இடம்பெற்றன,

இன்று நான்காவது நாளாக திலீபன் நினைவு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. [ரி]

## பாடசாலை மாணவர்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுபோட்டி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 19 வயது, 17 வயதுக்கிடைப்பட்டவர்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள் முதற்கட்டமாக கோட்டமட்டப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றன

இப்போட்டிகள் லீக் முறையில் நடைபெறும் கோட்டமட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் தெரிவுசெய்யப்படும் அணிகள் மாவட்ட மட்டத்திலான போட்டிகளில் பங்குபெற இருக்கின்றன.

ஆறு கல்விக்கோட்டங்களிலிருந்தும் நூற்றுக்குமதிகமான பாடசாலைகள் போட்டிகளில் பங்குபற்றுகின்றன. இப்போட்டிகளில் வெற்றி பெறும் அணிகளுக்கு தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினல் வெற்றிக்கிண்ணங்கள் வழங்கப்படும். இக்கிண்ணங்கள் சுற்றுக்கிண்ணங்களாக ஆண்டுதோறும்வெற்றிபெறும் அணிகளுக்கு வழங்கப்படும்.

பார்வையாளர்களாக வரும் மாணவர்களுக்கு ரூபா 2 உம், வளர்ந்தோருக்கு ரூபா 3 மாக நுழைவாயில் கட்டணம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

### இன்றைய ஆட்டம்

இன்று ஆரம்பமாகும் 'ஏ' பிரிவு போட்டியில (17வயது) தமிழ் சந்தையா வித்தியாலயத்தை எதிர்த்து அத்தியார் இந்தும், ஸ்கந்தா கல்லூரியை எதிர்த்து ஊரெழு கணேசாவும் உருமபராய் இந்துமைதானத்தில் மோதும்.

இதேவேளை மற்றொரு ஆட்டத்தில் இன்று உடுவில் மான்ஸ் எதிர் அச்சுவேலி மவியும், உரும்பராய்இந்து எதிர் மானிப்பாய் இந்தும் சுன்னாகம் ஸ்கந்தா மைதானத்தில் மோதும். (சி)

## இருவார நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கட்டிட மேசன் தொழிலாளர்களுக்கு இருவாரத்திற்குரிய இலவச உலர் உணவு தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

யாழ். மாவட்ட கட்டிட மேசன் தொழிலாளர் சங்கம் நிவாரணத்தைப் பெறும் முயற்சி சம்பந்தமாக செயலக உயரதிகாரிகளிடம் பல தடவை சந்தித்தபின் தற்போது இருவார நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. (56)

## ஈழத்தமிழர்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நண்பர்களாகவும் ஈழத்தமிழர்களை எதிரிகளாகவும் கருதுகிறது. தமிழர்களுக்கென்று ஒரு நாடுஇல்லாமல போனதே இதற்கு காரணம்.

இலங்கையில நடப்பது போல் பாகிஸ்தானில் நடந்தால் இந்தியா பார்த்துக்கொண்டிருக்குமா? ஐ நா வரை போயிருக்கும் எனவும் அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது (சி-159)

## உட்கட்சி மோதல்

### சுதந்திரக் கட்சிக்குள் வலுக்கிறது

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைத்துவம் தொடர்பான சாச்சை, தீர்வுக்குக் கொண்டுவராவிடில் அத்தனகலையிலுள்ள சுதந்திரக்கட்சி கிளையை அணைத்தையும் கலைத்துவிடப்போவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

அத்தனகலை சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் பலர் இதற்கான 'பெட்டிஷன்' ஒன்றை தயாரித்து வருகின்றனர்

குடும்பப் பூசல் கட்சிக்குள் நிலவும் பட்சத்தில் எதிர்கால தேர்தல்களில் வெற்றி பெற இயலாது.

திரு அனுராவுக்கும் அவர் சகோதரி திருமதி சந்திரிகாவுக்கும் இடையே தலைமைத்துவத்துக்கான போட்டியை அவரவர் ஆதரவாளர்கள் தூண்டிவருவதாகவும் அந்தப் பெட்டிஷனில் குறிப்பிடப்பட்டுள்ளன. (கே)

## ஜெயலலிதா விவகாரம்:

# தி. மு. க. மகஜர் ஆளுநர் பரிசிலனை

(சென்னை)

லஞ்ச ஊழல் முறைகேடுகள் தொடர்பாக, தமிழ் நாடு முதலமைச்சருக்கும் வேறு பல அரச அதிகாரிகளுக்கும் எதிராக வழக்கு தொடரக்கோரும் தி மு வின் விண்ணப்ப மனுவின் சட்டபூர்வமான அமசங்களை பரிசிலனை செய்வதாக தமிழக ஆளுநர் உறுதியளித்துள்ளார்.

இத் தகவலை தி மு. க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

திரு. மு. கருணாநிதி தலைமையில் நேறறு முன்தினம் தி. மு. க தொண்டர்கள் ஆளுநர் மாளிகைக்கு ஊர்வலமாக சென்று ஊழல் தொடர்பான மகஜரைக் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (கே)

## அ. தி. மு. கவிலிருந்து முன்னாள் அமைச்சர் நீக்கம்

(சென்னை)

தமிழக முன்னாள் அமைச்சர் திரு. வி.வி. சுவாமிநாதன் அ. அ. தி. மு. கவிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் தலைவர் செல்வி ஜெயலலிதா நேற்று அறிவித்துள்ளார்.

கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டதற்காக அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

திரு. சுவாமிநாதன் எம். ஜீ ஆர். மற்றும் ஜானகி ஆகியோரின் அமைச்சரவையில் அமைச்சராக இருந்தது குறிப்படத்தக்கது. (ரி)

## புலிகளுடன்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

படைப்பிரிவுகூட வலிமையாக இருக்க முடியாது. என்ன இருந்தாலும் இராணுவத்தினர் சம்பளத்திற்காக வேலைக்கு வந்தவர்கள் தானே என்றும கூறினர்.

தெரிவுக்குழு தமிழர் பிரச்னை தீர்வுக்கான அனைத்து அம்சங்களையும் ஆராய்ந்து வருகிறது. வடக்கு-கிழக்கு மாநிலங்களை இணைக்கவேண்டுமென்ற கோரிக்கைதான் பெரும் முட்டுக்கட்டையாக இருக்கிறது. இக்கோரிக்கையைச் சிங்களக் கட்சிகள் எதிர்க்கின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ரி)

## இலங்கை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

லுடன் வைக்கப்பட்டிருந்த இவர் அங்கிருந்தே புதுடில்லி சென்று இந்தியத் தலைவர்களை சந்தித்து தனது விருப்பத்தை தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தொடர்ந்து இருப்பதினுல் தமது அரசியல் எதிர்காலம் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் திரு. பெருமாள் இச்சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை திரு. வரதராஜப் பெருமாள் இன்னும் மூன்று மாதங்களில் அவுஸ்திரேலியா சென்று குடியேறத் திட்டமிட்டுள்ளார் என்றும் புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ரி)

## அறிவியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர்களுக்கான அறிவியல் கருத்தரங்கு தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3-30 மணிக்கு கொக்குவில் குளப்பிட்டி சந்தியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு நடுவப் பணியகத்தில் "உயிரினத்தின் தோற்றம்" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெறும். கருத்தரங்கு தொடர்பான ஒளிப்பதிவு நாடாவும் காண்பிக்கப்படும்.

## வன்னியில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வித்துள்ளார்.

கொக்குவெளி என்னுமிடத்திலிருந்து வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த ரகையை புலிகள் வழிமறித்து இத்தாக்குதலை நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

காயமடைந்த படையினர் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. [சு-சி]

## மரண அறிவித்தல்

### திருமதி லூர்த்தம்மா சூசைப்பிள்ளை

(ஒய்வுபெற்ற யாழ். வைத்தியசாலை ஊழியர்)

திருமதி லூர்த்தம்மா சூசைப்பிள்ளை 17-09-92 வியாழக்கிழமை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை—செபமாலை தம்பதிகளின் மகளும் ச. சூசைப்பிள்ளையின் (ஒய்வுபெற்ற பரந்தன் கூட்டுத்தாபன ஊழியர்) அன்பு மனைவியும், எஸ். நிக்கிலஸ், காலஞ்சென்ற எஸ். ஜே. ஜோர்ஜ், எஸ். ஜே அலெக்ஸ் (பட்டயக் கணக்காளர், அபுதாபி), Dr எஸ். பேர்னுட்ஷோ (நோர்வே) ஆகியோரின் அருமைத் தாயாரும், திருமதி சுமித்திரா அலெக்ஸ், திருமதி சிறேமி பேர்னுட்ஷோ ஆகியோரின் மாமியாரும், திருமதி வின்சன் திரேசம்மா (ஒய்வுபெற்ற ஆசிரியை, கொழும்பு), ஏ. அடைக்கலம் (ஒய்வுபெற்ற தபாலதிபர்), திருமதி மரியம்மா சுப்பிரமணியம் (ஒய்வுபெற்ற ஆசிரியை, விவசாய பாடசாலை, திருநெல்வேலி), ஏ. தேவராசா (ஈழநாடு), திருமதி அக்கினஸ் சாம்பசிவம் (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி), ஏ. ஆர். இரட்ணசோதி (பொறியியலாளர், U. K.) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக 6/1, பேக்கறி ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அன்னரின் இல்லத்திலிருந்து 19-ம் திகதி நாளை சனிக்கிழமை பி. ப. 3 மணிக்கு யாழ். அடைக்கலநாயகி தேவாலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு யாழ். மரியன்னை சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

6/1, பேக்கறி லேன்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (எ-2450)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி [illegible] அச்சகத்தில் 1992-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under licence Number B/10335/